අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
"இசுருபாய", பத்தரமுல்ல, இலங்கை
"Isurupaya", Battaramulla, Sri Lanka
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

எனது இல. / My Ref.: ED/01/05/04/06/03-ii
உமது இல. / Your Ref.:
திகதி / Date: 2025.04.15

சுற்றுநிருப இலக்கம் 17/2025

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து மாகாண விடய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலய விடய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அதிபர்கள்,
அனைத்து இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) ஆசிரியர் ஆலோசகர்கள்,

**பாடசாலை, வலய, மாகாண மற்றும் அகில இலங்கை மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) வருடாந்த போட்டிகளை நடாத்துவதற்கான சுற்றுநிருபம்**

செயலாளரின் இலக்கம் 2006/37(1) மற்றும் 2013.01.02 ம் திகதியுடைய சுற்றுநிருபம் மற்றும் இலக்கம் 12/2018 மற்றும் 12/2018(ii) இலக்கமுடைய 2018.03.13 திகதிய சுற்றுநிருபத்திற்குப் பதிலாக 2025.01.01ம் திகதி முதல் இரண்டாம் தேசிய மொழப் (சிங்களம்/ தமிழ்) போட்டிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சுற்றுநிருபத்தை இத்தால் முன்னிலைப்படுத்துகின்றேன். அதற்கமைய பாடசாலை மட்ட இரண்டாவ்து தேசிய மொழிகள் (சிங்களம்/ தமிழ்) போட்டிகள் இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் கையேட்டிற்கமைய நடாத்தப்படல் வேண்டும்.

2025ம் ஆண்டு முதல் இச் சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளுக்கமைய மாகாண, வலய மற்றும் பாடசாலை மட்டத்தினரை உரிய வகையில் அறியப்படுத்தி மிகச் சிறப்பாக ஒவ்வொரு வருடம் இப் போட்டிகளை அவ் அம் மட்டங்களில் நடாத்துவதற்கும், அதன் பின்னர் அகில இலங்கை மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவ மாணவியரைத் தெரிவு செய்து உரிய சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அகில இலங்கை மட்டப் போட்டிகளுக்கு, வெற்றி பெற்ற மாணவர்களைக் கலந்துகொள்ளச் செய்யும் போது சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி முழுமையான வகையில் தயாரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகளை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் படி தகுதி பெற்ற மாணவர்களை மாத்திரம் அகில இலங்கை மட்டத்திற்கு பிரேரிப்பது தொடர்பில் தங்களது விசேட கவனத்தை செலுத்துவது கட்டாயம் என்பதை அறியத் தருகின்றேன்.

இப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைத்து போட்டியாளர்களும் ஏனைய பங்குதாரர்களும், போட்டின் சகல சந்தர்ப்பங்களிலும் இப் போட்டிச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்ட விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்பதுடன், நடுவர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இச் சுற்றுநிருபத்தில் தரப்பட்டுள்ள ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பந்திகள் மற்றும் வரையறைகளுக்கு முரணாக செயற்படுவதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பொருத்தமான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினை சாரும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

நாலக களுவெவ
செயலாளர்

# அகில இலங்கை இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) வருடாந்த போட்டிகள்

## 1.0. அறிமுகம்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் இரண்டாம் தேசிய மொழி அலகினூடாக அரச பாடசாலைகளில் தரம் 6-9 வரையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் இப் போட்டிகள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றது.

புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கமைய பொது அறிவை அதிகரித்தல், படைப்பாற்றல் திறன்கள் மற்றும் இரண்டாம் தேசிய மொழித் திறமையை விருத்தி செய்வது இப் போட்டியின் குறிக்கோளாகும்.

இப் போட்டியில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் முதலாம் மொழியாக சிங்களத்தையும் இரண்டாம் தேசிய மொழியாக தமிழ் மொழியையும் கற்கும் மாணவர்களும், தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் முதலாம் மொழியாக தமிழ் மொழியையும், இரண்டாம் தேசிய மொழியாக சிங்களத்தையும் கற்கும் தரம் 6 – 9 வரையான மாணவர்களே பங்கேற்கலாம்.

1.1. இப் போட்டியான 4 மட்டங்களில் நடைபெறும்.

1) பாடசாலை மட்டம்
2) வலய மட்டம்
3) மாகாண மட்டம்
4) அகில இலங்கை மட்டம்

1.2. தாய் மொழி சிங்களம் மற்றும் தமிழ் மொழியையுடைய மாணவர்களது இரண்டாம் தேசிய மொழிக்கான (தமிழ் மற்றும் சிங்களம்) ஊக்கத்தை மேம்படுத்துவதற்காக 3 போட்டித் தலைப்புக்களின் கீழ் இப் போட்டிகள் நடைபெறும்

1.3. நாட்டார் பாடல் போட்டி தவிர்த்து ஏனைய போட்டிகளுக்கு மாத்திரம் கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

1) சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தாய் மொழியாக சிங்களத்தைக் கொண்டுள்ள மாணவர்கள் முதலாம் மொழியாக சிங்களத்தைக் கற்பதுடன், இரண்டாம் மொழியாக தமிழைக் கற்கும் மாணவர்கள் (சிங்கள மாணவர்கள்) இரண்டாம் தேசிய மொழி தமிழின் கீழ் ஒரு போட்டியில் மாத்திரம் பங்கேற்க முடியும்.

2) சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தாய்மொழியாக தமிழைக் கொண்டுள்ள, முதலாம் மொழியாக சிங்களத்தைக் கற்பதுடன் இரண்டாம் மொழியாக தமிழைக் கற்கும் மாணவர்கள் (முஸ்லிம் மற்றும் தமிழ் மாணவர்கள்) இரண்டாம் மொழி தமிழின் கீழ் ஒரு போட்டியித் தலைப்பின் கீழ் மாத்திரம் போட்டியிட முடியும்.

3) தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தாய்மொழியாக தமிழைக் கொண்டுள்ள, முதலாம் மொழியாக தமிழைக் கற்பதுடன், இரண்டாம் மொழியாக சிங்களத்தைக் கற்கும் மாணவர்கள் இரண்டாவது தேசிய மொழி சிங்களத்தின் கீழ் போட்டியிட முடியும்.

அதே போன்று இப் போட்டியில் மேலே குறிப்பிடப்பட்ட 3 போட்டித் தலைப்புக்களுக்குரிய மாணவர்களுக்காக தனித்தனியாக போட்டிகளை நடாத்தி முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களை மாத்திரம் (நாட்டார் பாடல் தவிர்த்து) வலய, மாகாண மற்றும் அகில இலங்கை மட்டப் போட்டிகளுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும். நாட்டார் பாடல் போட்டியில் முதலாம் நிலையப் பெற்றுக் கொண்ட குழுவினர் மாத்திரம் அடுத்த கட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்யப்படல் வேண்டும்.

**2.0. பொதுக் குறிக்கோள்கள்**

01. இனங்களுக்கிடையே புரிந்துணர்வு மற்றும் அடிப்படைத் தொடர்பாடல் திறமைகளை விருத்தி செய்தல்

02. தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தல் மற்றும் இனங்களுக்கிடையேயான கலாசார ரீதியிலான நல்லிணக்கத்தை மேம்படுத்துதல்.

03. இரண்டாவது தேசிய மொழி கற்றல் கற்பித்தல் செயன்முறையினை முறைமைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

04. இரண்டாம் தேசிய மொழி மற்றும் பன்மொழித் திறன்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

05. இரண்டாவது தேசிய மொழி கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பில் ஊக்கத்தை ஏற்படுத்துதல்.

06. இரண்டாவது தேசிய மொழியுடன் தொடர்பான கற்றல் கற்பித்த செயன்முறைசார் நேரடி அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

07. நிகழ்கால உலகின் பிரச்சனைகளை மானிட ரீதியிலில் கருணையுடன் நோக்கும் திறனைக் கொண்ட உணர்திறன் கொண்ட நபர்களை சமூகத்தில் உருவாக்குதல்.

**3.0. அடிப்படை அறிவுறுத்தல்கள்**

கால வரையறைகள் மற்றும் போட்டிகளை நடாத்தும் பொறுப்பு

| **போட்டி மட்டம்** | **போட்டியை நடாத்துதல் மற்றும் பங்குபற்றுகை** | **போட்டி நடாத்தி முடிக்கப்பட வேண்டிய திகதி** | **பெறுபேறுகளைக் கையளிக்க வேண்டிய இறுதித் திகதி மற்றும் விபரங்கள்** |
|---|---|---|---|
| பாடசாலை | 1.அதிபர்<br>2. இரண்டாவது தேசிய மொழி விருத்திக் குழு<br>3.பாடசாலையின் தரம் 6-9 மாணவர்கள் | மே 15 | அப் அப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்களை மாத்திரம் உள்ளடக்கி உரிய மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மே மாதம் 31 |

| | | | |
|---|---|---|---|
| | | | ம் திகதிக்கு முன்னர் (மாதிரிப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது) தமது வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| வலயம் | 1. வலயக் கல்விப் பணிப்பாளர்/ இரண்டாம் தேசிய மொழி ஒருங்கிணைப்பாளர்/ இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு<br>2. பாடசாலைப் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் | ஜூலை 30 | அவ் அப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர்களை உள்ளடக்கி ஆகஸ்ட் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் இதில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| மாகாணம் | 1. மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணத்தின் இரண்டாம் தேசிய மொழி ஒருங்கிணைப்பாளர்/ மாகாணத்தின் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு<br><br>2. வலயப் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் | செப்டெம்பர்.15 | அவ் அப் போட்டிகளில் 1ம் மற்றும் 2 ம் நிலைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களது பெயர்களை மாத்திரம் உள்ளடக்கி, இதில் தரப்பட்டுள்ள உத்தியோகபூர்வ பெறுபேறு மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்து செப்டெம்பர் 30ம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும். |
| அகில இலங்கை மட்டம் | 1. கல்விப் பணிப்பாளர்/ பி.க.ப (இரண்டாம் தேசிய மொழி)<br>2. மாகாணப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் | நவம்பர்.15 | டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கும் வைபவம் நடைபெறும். |

### 3.1. பாடசாலை மட்டம் (மே மாதம் 15ம் திகதிக்கு முன்னர்)

இப் போட்டிகளின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் வகையில் பாடசாலை மட்டப் போட்டிகளில் தரம் 6 - 9 வரையான அனைத்து மாணவர்களையும் பங்கேற்கச் செய்வது கட்டாயமான தேவையாகும். பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்காக ஒரு நாளை ஒதுக்குவது அதிபர் மற்றும் இரண்டாம் மொழி அபிவிருத்திக் குழுவின்

பொறுப்பாகும். பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களை மாத்திரம் வலய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்தல் வேண்டும். இதன் போது சுற்றுநிருபத்தின் 1.3ம் பந்திக்கமைய செயற்படல் வேண்டும்.

**3.2.** வலய மட்டம் **(ஜுலை 30ம் திகதிக்கு முன்னர்)**

இதன் போது வலய மட்டத்தில் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு ஒன்றை நியமித்துக் கொள்ள வேண்டும். அதன் தலைவராக வலயக் கல்விப் பணிப்பாளரும், செயலாளராக பாட ஒருங்கிணைப்பாளரும், குழு அங்கத்தவர்களா மொழி மற்றும் அழகியல் பாட ஒருங்கிணைப்பாளர்கள் மூவர் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். வலய மட்ட எழுத்து மூலப் பரீட்சைக்கு கல்வி , உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் மாகாண மட்டப் போட்டிகளுக்காக கடந்த வருடங்களில் வழங்கப்பட்ட வினாப் பத்திரங்களை மாதிரி வினாத்தாள்களாக கருதி அவற்றுடன் தழுவியதாக வினாப் பத்திரங்களை வலயத்தின் இரண்டாவது தேசிய மொழி ஒருங்கிணைப்பாளர் தயாரித்தல் வேண்டும். அதே போன்று பாடசாலை மட்டப் போட்டிகளின் மேற்பார்வைப் பணிகளும் வலய மட்டத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். **வலயப் போட்டிகளை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களை மாத்திரம் இப் போட்டியில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும்.**

**3.3.** மாகாண மட்டம் **(செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர்)**

இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கமைய சகல மாகாணங்களிலும் இரண்டாவது தேசிய மொழி விருத்திக் குழு ஒன்றை நியமித்துக் கொள்ள வேண்டும். அதன் தலைவராக மாகாணக் கல்விப் பணிப்பாளரும், செயலாளராக இரண்டாவது தேசிய மொழி ஒருங்கிணைப்பாளரும், குழு அங்கத்தவர்களாக உரிய வலயங்களின் இரண்டாவது தேசிய மொழி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் உட்பட ஆகக் குறைந்தது ஒரு வலயத்திலிருந்து ஒருவரை உள்ளடக்கி குழு அமைக்கப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பில் திட்டமிடல் மற்றும் பாடசாலை மட்டத்திலிருந்து வலய மட்டப் போட்டிகள் வரையில் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை மாகாண இரண்டாவது தேசிய மொழிப் பாட ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், சகல மட்ட மேற்பார்வைப் பணிகளிலும் கலந்துகொள்ள வேண்டும்.

**மாகாண மட்ட வாய்மொழி மூலப் போட்டிகள் மாகாண நாட்டார் பாடல் உட்படலாக –** எழுத்து மூலப் போட்டிகளை நடாத்த முன்னர் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மாகாண அடிப்படையில் தனித்தனியாக போட்டிகள் நடாத்தப்படல் வேண்டும்.

மாகாண மட்ட **எழுத்து மூலப் போட்டிகள்**, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் மாகாணங்களுக்கு வழங்கப்படும் வினாப் பத்திரங்கள் மற்றும் கால

அட்டவணைக்கு அமைவாக அனைத்து மாகாணங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடாத்தப்படல் வேண்டும்.

அனைத்து மாகாணப் போட்டிகளதும் பெறுபேறுகள் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் மென் பிரதிகள் மற்றும் அச்சுப் பிரதிகள் சகிதம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மாகாணப் போட்டிகளை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் முதலாம், இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களை மாத்திரம் அகில இலங்கை மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும். நாட்டார் பாடலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் குழுவினரை மாத்திரம் அகில இலங்கை மட்டத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டும்.

**கருத்தில் கொள்க:**
மாகாண மட்டப் போட்டிகளை நடாத்தும் போது அவ் அம் மாகாணங்களின் உரிய அனைத்து வலயங்களதும் ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களைப் பங்கேற்கச் செய்வதனூடாக போட்டியின் வெளிப்படைத் தன்மை மிகச் சிறப்பாக வெளிக்காட்டப்படும்.

### 3.4. அகில இலங்கை மட்டம் (நவம்பர் 30ம் திகதிக்கு முன்னர்)

மாகாண மட்டப் பெறுபேறுகளின் அடிப்படையில் சுற்றுநிருபத்தின் 1.3ம் பந்திக்கமைய 3 போட்டித் தலைப்புக்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்காக அகில இலங்கைப் போட்டிகள் தனித் தனியாக இரண்டாம் தேசிய மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் தேசிய மொழி தமிழ் என்றவாறாக கல்வி. உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும்.

**கருத்தில் கொள்க:**
முந்தைய வருடங்களில் கலந்துகொண்ட போட்டிப் பிரிவுகளின் கீழ் அகில இலங்கை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களில் அடுத்த வருடங்களில் அவர்கள் முன்னராக வெற்றி பெற்ற போட்டியில் கலந்துகொள்ள முடியாது என்பதுடன், வெற்றி பெற்ற போட்டி தவிர்த்து ஏனைய போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். எந்தவொரு மட்டத்திலும், வழங்கப்பட்டுள்ள போட்டி விதிமுறைகளை மீறும் பட்சத்தில் போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

### 3.5 போட்டி நிகழ்ச்சிகள்

இப் போட்டிகளுக்குரிய போட்டி நிகழ்ச்சிகள், போட்டி நடாத்தப்பட வேண்டிய தரங்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

1. இரண்டாவது தேசிய மொழி தமிழ் – தாய் மொழியாக சிங்களத்தைக் கொண்டிருக்கும் மாணவர்கள் (சிங்கள மாணவர்கள்)

2. இரண்டாம் தேசிய மொழி தமிழ் – தாய் மொழியாக தமிழைக் கொண்டிருந்தாலும் முதலாம் மொழி சிங்களத்தைக் கற்கும் மாணவர்கள் (தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள்)
3. இரண்டாம் தேசிய மொழி சிங்களம் – தாய் மொழி தமிழ் மற்றும் முதலாம் மொழியாக தமிழைக் கற்கும் மாணவர்கள்

3.6. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்: தபால் அடையாள அட்டை அல்லது அதிபரது பரிந்துரையுடன் கூடிய புகைப்படம் ஒன்றும் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியொன்று/ சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொடர் இல | மதிப்பீட்டு வகை | தரம் மற்றும் போட்டிகளின் எண்ணிக்கை | | | | மொத்தப் போட்டிகள் |
|---|---|---|---|---|---|---|
| | | தரம் 06 | தரம் 07 | தரம் 08 | தரம் 09 | |
| 01 | மொழிப் பிரயோகமும் கிரகித்தலும் | 03 | 03 | 03 | 03 | **12** |
| 02 | வாசிப்பு | 03 | 03 | 03 | 03 | **12** |
| 03 | பேச்சு | 03 | 03 | 03 | 03 | **12** |
| | மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கை | 09 | 09 | 09 | 09 | **36** |
| 04 | நாட்டார் பாடல் குழுப் போட்டி | | | | | **03** |
| | **மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கை** | | | | | **39** |

ஒவ்வொரு போட்டிகளும் ஆரம்பிக்க முன்னர் இங்கு கீழே தரப்பட்டுள்ள நோக்கம், நிபந்தனைகள் மற்றும் புள்ளி வழங்கல் முறைகளை மாணவர்களுக்கு தெளிவாக விவரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான பொறுப்பு உத்தியோகத்தர்களைச் சாரும். போட்டிகளில் கலந்துகொள்வதற்காக சரியான பெயர், முகவரி, தர, கற்கும் மொழி மூலம் போட்டியில் பிரதிநிதித்துவப்படுத்தும் வலயம் மற்றும் மாகாணம் என்பன கட்டாயம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (இவ் விபரங்களை தாய்மொழியில் எழுதலாம்)

**இப் போட்டிகளின் போது நடுவர் சபையின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.**

**4.0. நிபந்தனைகள் மற்றும் புள்ளி வழங்கும் முறை**

**4.1. மொழிப் பிரயோகமும் கிரகித்தலும்- எழுத்து மூலப் போட்டி**

**4.1.1. நோக்கம்**

எழுத்துக்கள், வசனங்கள், வாக்கியங்கள் மற்றும் புகைப்படங்களை சரியாக அடையாளம் காணும் திறனை விருத்தி செய்தல் மற்றும் இரண்டாம் தேசிய மொழி தொடர்பான புரிதலை அதிகரித்தல்

**4.1.2. போட்டி நடைமுறை விதிகள்**

1) தரம் 6, 7, 8, 9 வகுப்பினருக்கு 4 போட்டிகள்.

2) தரம் 6, 7 இற்கு 1 மணித்தியாலமும் 30 நிமிடங்களும், தரம் 8, 9 இற்கு 2 மணித்தியாலங்களும் நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்.

3) ஒவ்வொரு தரங்களுக்குமுரிய பாடப் புத்தகங்களிலிருந்து வினாக்கள் தயாரிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அன்றாட வாழ்க்கைக்குரிய பொது அறிவினை பரிசோதிக்கும் வினாக்களும் உள்ளடக்கப்படும்.

4) மாகாண மற்றும் அகில இலங்கை மட்டங்களுக்கான வினாப் பத்திரங்கள் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும்.

**4.1.3. புள்ளி வழங்கும் முறை**

மொத்தம் 100 புள்ளிகள்.

**<u>4.2. வாசிப்பு</u>**

**4.2.1. இலக்குகள்**

1) சரியாக உச்சரிப்பதற்கு பழக்கப்படுத்துதல்

2) கிரகித்து கவனமாக வாசித்தல்.

3) வாசிப்புத் திறன் மற்றும் வேகத்தை அதிகரித்தல்.

4) உரத்து வாசிப்பதை பழக்கப்படுத்துதல்.

5) உணர்வுகளை வெளிக்காட்டும் வகையில் வாசிப்பதை மேம்படுத்துதல்.

**4.2.2. போட்டி நடைமுறை விதிகள்**

1) தரம் 6, 7, 8, 9 வகுப்பினருக்கு 4 போட்டிகள்.

2) உரிய தரங்களுக்குரிய பாடப் புத்தகங்களிலிருந்து ஒரு பகுதி மற்றும் நடுவர் சபையினரால் வழங்கப்படும் செய்திப் பத்திரிகை, சஞ்சிகை அல்லது வேறு புத்தகங்களிலிருந்து ஒரு பகுதியை உரத்து வாசித்தல்.

3) குரல் கட்டுப்பாடு, நிறுத்தல் குறிகள் மற்றும் சொற்களைப் பிரித்தல் போன்றன தொடர்பில் கவனம் செலுத்துதல்

**4.2.3. புள்ளி வழங்கும் முறை**

1) புரிந்து வாசித்தல் - 15

2) சரியான உச்சரிப்பு - 10

3) தெளிவாக உரத்து வாசித்தல் - 10

4) உணர்வுகளை வெளிக்காட்டும் வகையில் வாசித்தல் - 10

5) ஒட்டுமொத்த வாசிப்பு - 05

**மொத்தப் புள்ளிகள் - 50**

## 4.3. பேச்சு

### 4.3.1. இலக்குகள்

1) பேச்சுத் திறனை மேம்படுத்துதல்.

2) தர்க்க ரீதியாக மற்றும் முறையாக கருத்துத் தெரிவிக்கும் திறனை விருத்தி செய்தல்.

3) தலைப்பிற்குரிய விடயங்களை உரிய நேரத்தினுள் முன்வைக்கும் திறனை விருத்தி செய்தல்.

4) தெளிவான உச்சரிப்பினை மேம்படுத்துதல்.

5) குரல் கட்டுப்பாடு மற்றும் பொருத்தமான உடல் அசைவுகளூடாக கவரக்கூடிய திறனை மேம்படுத்துதல்.

### 4.3.2. மதிப்பீட்டு நடைமுறை விதிகள்

1) தரம் 6, 7, 8, 9 வகுப்பினருக்கு 4 மதிப்பீடுகள்.

2) இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புக்களின் குழுக்கள் முறையில் தெரிவு செய்யப்படும் தலைப்பில் மாத்திரம் பேச்சினை முன்வைக்க வேண்டும் என்பதுடன், தலைப்பில் மாற்றங்களை செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. (தலைப்புக்கள் வருடாந்தம் மாற்றத்திற்குள்ளாகும்) காலம் 03 நிமிடங்களாகும்.

4) அதற்கு மேலதிகமாக மாகாண மற்றும் அகில இலங்கை மட்டத்தில் நடுவர் சபையினால் அச் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் சரளமான தலைப்பு ஒன்றின் கீழ் பேச்சு ஒன்றை முன்வைக்க வேண்டும். காலம் 02 நிமிடங்கள், தயாராவதற்காக 02 நிமிடங்கள் வழங்கப்படல் வேண்டும்.

### 4.3.3. புள்ளி வழங்கும் முறை

1) தலைப்பிற்கு பொருத்தமாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருத்தல் - 15

2) தெளிவான மற்றும் சரியான உச்சரிப்பு - 10

3) விடயங்களை தெளிவாக முன்வைக்கும் திறமை - 10

4) குரல் கட்டுப்பாடு மற்றும் பொருத்தமான உடல் அசைவுகள் - 10

5) உரிய நேரத்தைப் பயன்படுத்துதல் மற்றும் நிறைவு - 05

மொத்தப் புள்ளிகள் - 50

## 4.4. நாட்டார் பாடல்கள்

### 4.4.1. இலக்குகள்

1) ரிதம், தாளம், வாசிப்புத் திறன், சரியான உச்சரிப்பு, உணர்வுகளை வெளிக்காட்டும் இயலுமை மற்றும் பாரம்பரியமான முறையில் பாடும் பாணிகளை இனங்காணல்

2) கலாசார அடையாளத்தை இனங்காணல் மற்றும் பரிமாறிக் கொள்ளல்

### 4.4.2. மதிப்பீட்டு நடைமுறை விதிகள்

1) இப் போட்டியும் மேலே (3.5) போட்டித் தலைப்பின் கீழ் நடைபெறும்

2) ஒரு பாடசாலையிலிருந்து தரம் 6, 7, 8, 9 இலிருந்து ஒரு தரத்தில் இரண்டு மாணவர்கள் வீதம் உள்ளடங்கும் வகையில் 8 மாணவர்களைக் கொண்ட குழு ஒன்றை மாத்திரம் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும். பாடசாலை, வலயம் மற்றும் மாகாண மட்டங்களில் முதலாம் நிலையைப் பெற்றுக் கொண்ட குழு மாத்திரம் அகில இலங்கைப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்யப்படல் வேண்டும். (குழு அங்கத்தவர்களை எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்ற முடியாது)

3) எந்தவொரு இசைக் கருவிகளையும் பயன்படுத்தலாகாது

4) சுற்றுநிருபத்தின் இணைப்பு இலக்கம் II இல் தரப்பட்டுள்ள நாட்டார் பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பகுதிகளுக்குரிய கவிதைகளும், அதற்கு மேலதிகமாக தங்களால் தெரிவு செய்யப்பட்ட நாட்டார் பாடல் வகையிலிருந்து ஒரு கவிதையும் என்பதாக 03 கவிதைகளைப் போட்டியின் போது முன்வைக்க வேண்டும். தங்களால் தெரிவு செய்யப்படும் கவிதை உரிய வருடத்தின் இணைப்பு II இல் இல்லாத கவிதையாக இருத்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பில் போட்டிக்குரிய வருடத்தில் பொருத்தமான நாட்டார் பாடல் தொகுதிகளை தெரிவு செய்து பரிந்துரைப்பது கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் பணிப்பாளரது பொறுப்பாகும்.

I. ஆலோசனை சார்ந்த கவிதைகள்
II. நாட்டுப் பற்றுக் கவிதைகள்
III. தாலாட்டுப் பாடல்கள்
IV. விளையாட்டு சார் பாடல்கள்
V. தொழில் சார்ந்த பாடல்கள்

சுற்றுநிருபத்தின் இணைப்பு இலக்கம் II இல் இப் பகுதிகளுக்குரிய நாட்டார் பாடல்கள்கள் தரப்பட்டுள்ளன.

5) பாடசாலை மனனம் செய்து பாட வேண்டும்.

6) அவ் அவ் நாட்டார் பாடல்களுக்குரிய ஒவ்வொரு செய்யுள்களையும் அவற்றின் சுரங்களில் பாட வேண்டும்.

7) முக பாவணை தவிர்த்து உடல் அசைவுகள் மத்தியஸ்தத்தின் போது கருத்தில் கொள்ளப்படாது என்பதுடன் உடல் அசைவுகள் அவசியமில்லை.

8) பாடசாலை சீருடை அணிந்து பாட வேண்டும்.

**4.5.3. புள்ளி வழங்கல் திட்டம்**

| | |
|---|---|
| 1) பாரம்பரியமான தாளங்கள் – சுருதிகளைப் பின்பற்றுதல். | - 15 |
| 2) வசனங்களை சரியாக உச்சரித்தல் | - 15 |
| 3) குழு உணர்வுடன் பாடுதல் | - 10 |
| 4) முக பாவணையினை வெளிக்காட்டுதல் மற்றும் மனனம் | - 10 |
| **மொத்தப் புள்ளிகாள்** | **- 50** |

**5.0. போட்டிகளை ஒழுங்கு செய்வதற்கான பொதுவான ஆலோசனைகள்**

5.1. ஒவ்வொரு பாடசாலையிலும் இரண்டாம் மொழி அபிவிருத்திக் குழு ஒன்றை நியமித்துக் கொள்ள வேண்டும். அதன் தலைவராக அதிபரும், செயலாளராக விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியரும் அங்கத்தவர்களாக சிங்கள, தமிழ் மற்றும் அழகியல் ஆசிரியர் மூவரும் உள்ளடங்குதல் வேண்டும்.

5.2. பாடசாலை மட்டப் போட்டிகளில் தரம் 6-9 வரை கல்வி கற்கும் மாணவர்களை பங்கேற்கச் செய்ய வேண்டும். இது தொடர்பில் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள் மற்றும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு பொறுப்பு வகிக்க வேண்டும்.

5.3. போட்டியில் பங்குபற்றுபவர்கள் (ஒரு போட்டிக்கு) – நாட்டார் பாடல்கள் தவிர்த்து

5.3.1. பாடசாலை மட்டம் - தரம் 6- 9 களில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும்

5.3.2. வலய மட்டம் - பாடசாலை மட்டத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்கள் (ஆகக் கூடியது இரண்டு பேர்)

5.3.3. மாகாண மட்டம் - வலயங்களில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்கள் (ஆகக் கூடியது இரண்டு பேர்)

5.3.4. அகில இலங்கை - மாகாணங்களில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்கள் (ஆகக் கூடியது இரண்டு பேர்)

5.4. பாடசாலைகள், வலயங்கள், மாகாணங்கள் மற்றும் அகில இலங்கை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கு அவ் அம் மட்டங்களில் சான்றிதழ்களை வழங்க வேண்டும் அச் செயற்பாடு தாமதிக்கப்படுவதன் விளைவாக போட்டியின் குறிக்கோள்கள் நிறைவேறாது.

5.5. இப் போட்டிகளை நடாத்தும் போது அனைத்து மட்டங்களிலும் உத்தியோகத்தர்கள் முறையாகவும் பக்கசார்பின்றியும் செயற்பட வேண்டும் என்பதுடன், கால அட்டவணைக்கமைய உரியவாறு போட்டிகளை நடாத்தி உத்தியோகபூர்வ பெறுபேறுகளை சரியாகவும் தாமதமின்றியும் வெளிப்படைத் தன்மையுடனும் வெளியிடுதல் மற்றும் அதற்குரிய மாணவர்களது தகவல்களை கோவைப்படுத்திப் பேணுவது ஒவ்வொரு உத்தியோகத்தர்களதும் பொறுப்பாகும்.

5.6. முதல் சுற்றில் பங்கேற்கும் போட்டியாளர்களுக்குப் பதிலாக அடுத்தடுத்த சுற்றுக்களில் மாற்றீட்டுப் போட்டியாளர்களை கலந்துகொள்ளச் செய்ய முடியாது.

5.7. போட்டியாளர்களது முழுப் பெயரை பிறப்புச் சான்றிதழுடன் ஒப்பிட்டு சரியானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5.8. பிறப்புச் சான்றிதழுக்கமைய இனத்தை அடையாளம் காண்பதனூடாக கலந்துகொள்ளும் போட்டித் தலைப்பினை தெளிவாக இனங்காண முடியும்.

இணைப்பு ।

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இரண்டாம் தேசிய மொழிப் (சிங்களம்/ தமிழ்) போட்டிகள் (தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்)**

01. மாணவரின் முழுப் பெயர் :-
.....................................................................................................

02. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
..............................................................................................

03. பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி :-
..............................................................................

04. மாணவரின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :-
.................................................................

05. கல்வி கற்கும் மொழி மூலம்:-
…...............................................................................................

06. கற்கும் முதலாம் மொழி:-
…....................................................................................................

07. போட்டியில் முன்னிலையாகும் இரண்டாவது தேசிய மொழி:-
...............................................

08. கலந்துகொள்ளும் போட்டி:-
....................................................................................................

09. வலயம் :-.......................................................................................................................................

10. மாகாணம்:-
.........................................................................................................................

11. தரம் (உ+ம்: தரம் 6) :-
…..........................................................................................................

12. இவ் வருடத்திற்கு முந்தைய வருடம் ஒன்றில் இரண்டாவது தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) அகில இலங்கைப் போட்டியில் கலந்துகொண்டு முதலாம்/ இரண்டாம்/ மூன்றாம் நிலைகளைப் பெற்றிருப்பின் அதனைக் குறிப்பிடவும். அவர்கள் அகில இலங்கைப் போட்டியில் அதே போட்டி வகையில் கலந்துகொள்ள முடியாது)

I. வருடம் - தரம் -

II. போட்டி வகை☐ பேச்சு☐ வாசிப்☐ மொழிப் பிரயோகமும் கிரகித்தலும்

☐ நாட்டார் பாடல்

III. போட்டித் தலைப்பு (1.3 இற்குரியது) :-
.............................................................................

IV. பெற்றுக் கொண்ட நிலை:-

முதலாம் ☐ இரண்டாம்☐ மூன்றாம்☐

**மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றோம்.**

1) பாடப் பொறுப்பாசிரியரின் பெயர்:- ....................கையொப்பம்:-.......................திகதி:- ....................

2) அதிபரின் கையொப்பம்:-................................... பதவி முத்திரை/ திகதி:- ......................................

3) பாட ஒருங்கிணைப்பாளரின் கையொப்பம்:-..................... பதவி முத்திரை/ திகதி:- ...........................

4) வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்:-.................... பதவி முத்திரை/ திகதி:- ......................

5) மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்:-..................... பதவி முத்திரை/ திகதி:- ..................

(இப் பெறுபேறுகளை அறிக்கையிட வேண்டிய உத்தியோகபூர்வ படிவத்தை முறையாக பூரணப்படுத்தி அடுத்த போட்டிக்காக இரண்டு பிரதிகளில் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.)